Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 96/2018 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW7 ( LW12)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இமானுவேல்ராஜ்குமார் | Village | திண்டுக்கல் |
| Father/ Husband Name | தர்மராஜ் | Taluk | திண்டுக்கல் |
| Age | 54 /2026 | Calling | காவல்துணைக்கண்காணிப்பாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 04.55 **PM**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட பொருளாதார குற்ற பிரிவில் காவல்துணைக் கண்காணிப்பாளராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 28.09.2017 ம் தேதி சின்னமனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் 28.09.2017-ம் தேதி 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் முத்துபாண்டி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகேந்திரன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 608/17 பிரிவு 279, 304(A) இதச ஆக வழக்கு பதிவு செய்தார். பின்னர் வழக்கு கோப்பினை சின்னமனூர் கூடுதல் பொறுப்பில் இருந்த காவல் ஆய்வாளர் சரஸ்வதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன், கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் நாகேந்திரன், செல்வராணி, ரவி, சின்னமுருகேசன், முருகேசன், கந்தசாமி, முத்துபாண்டி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 29.09.2017-ம் தேதி 07.30 மணிக்கு சின்னமனூர் அரசு மருத்துவமனையில் இறந்து போன விஜயபிரபாகரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்பு சாட்சிகள் நாகேந்திரன், செல்வராணி ஆகியோர்களை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே 14.00 மணிக்கு எதிரி ஜீவா என்பவரை நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவின் படி நிலைய பிணையில் விடுவித்தார். 16.10.2017-ம் தேதி நான் இவ்வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் சம்மந்தப்பட்ட விபத்தினை ஏற்படுத்திய TN 60 Q 1271 உழவு செய்யும் டிராக்டர் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 14.11.2017-ம் தேதி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்றேன். வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ராஜ்குமார் என்பவரையும் முதல் விசாணை செய்த சார்பு ஆய்வாளர் முத்துபாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம்

பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திருமதி. சண்முகபிரியா அவர்களை விசாரணை செய்து சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத கூறாய்வு பணிக்கு சென்ற காவலர் நல்லதம்பி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு விசாரணை முடித்து 14.11.2017–ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4, 5**, பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6**, உடற்கூறாய்வு சான்றிதழ், **அ.சா.ஆ.7**, மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.8**,ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவோ, கவனக்குறைவாகவோ ஓட்டியதாக தனது புகாரில் அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது சம்மந்தப்பட்ட டிராக்டர் வாகனத்தில் அமர்ந்திருந்த போது விபத்து ஏற்பட்டதா? அல்லது விவசாய நிலத்தின் வரப்பின் மீது அமர்ந்திருந்த போது விபத்து ஏற்பட்டதா? என்றால் டிராக்டர் வாகனத்தில் அமர்ந்திருந்த போது விபத்து ஏற்பட்டது. கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 விவசாய நிலத்தின் வரப்பின் மீது அமர்ந்திருந்த போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சியான முருகேசன் தான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எழுதப்பட்டுயிருந்தன் விபரம் தனக்கு தெரியாது என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனது விசாரணையின் போது விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று சாட்சிகள் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆகினும் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.